




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சுதந்திர தினவிழாவை முன்னிட்டு அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் முன்னேற்பாடு பணிகள் குறித்த ஒருங்கிணைப்புக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (22.07.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 471/2016 நாள்: 22.07.2016

**அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்க மைதானத்தில்**
**சுதந்திர தினவிழா நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.**
**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சுதந்திர தினவிழாவை முன்னிட்டு அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் முன்னேற்பாடு பணிகள் குறித்த ஒருங்கிணைப்புக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (22.07.2016) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமைத்தாங்கி தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் உள்ள அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்க மைதானத்தில் சுதந்திர தினவிழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு வருகை தரும் முக்கிய விருந்தினர்களை சாமியானா அமைத்து உட்கார வசதி செய்திட நாகர்கோவில் கோட்டாட்சியர் அவர்களையும், நாகர்கோவில் நகராட்சி மூலம் மைதானத்தில் கழிப்பறை, குடிநீர் வசதிகளை ஏற்படுத்திட வேண்டும் எனவும், கடந்த வருடம் போக்குவரத்து வசதி செய்ததை போல் இந்த வருடமும் போக்குவரத்து வசதி செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், ஆவீன் மூலம் பள்ளி குழந்தைகளுக்கு ரோஸ் மில்க் (150 மி.லி.) வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், விபத்து தவிர்த்திடும் வகையில் தீயணைப்புத்துறை பணியாளர்கள் பணியில் இருத்திட வேண்டும் எனவும், பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளை தாமத படுத்தாமல் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், ஒவ்வொரு துறைகளில் சிறப்பாக பணியாற்றிய பணியாளர்களை, தேர்வு செய்து முன்னதாகவே மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்களிடம் (பொது) வழங்கிட வேண்டும். விழாவிற்கான அனைத்துப் பணிகளையும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் கண்காணிக்க வேண்டும்.

மேலும் கடந்த ஆண்டை போல், சுதந்திர தினவிழா நிகழ்ச்சி இவ்வாண்டும் சிறப்பாகவும், பாதுகாப்பாகவும் நடைபெற அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. பொ. இராஜேந்திரன், இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு. சந்திரசேனன் நாயர், பிற்றபடுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர் திரு. பி.வி. சரவணன், உதவி ஆணையர் (ஆயம்) திரு. காளிமுத்து, மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர் திரு. மாரிமுத்து, பொதுமேலாளர் ஆவீன் திரு. சுந்தர மகாலிங்கம், சமூக பாதுகாப்பு திட்டம் துணை ஆட்சியர் திரு. எம்.சந்திரன், வட்டாட்சியர்கள் திருமதி. ஷீலா, திருமதி. முத்துலெட்சுமி, திருமதி. புவனேஸ்வரி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.